## மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.

**அசல் வழக்கு எண். 84/2022**

2024 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 22 ஆம் நாள் வியாழக்கிழமை என்பவரது சாட்சியாகிய சாவித்திரி **PW.1** இன் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டப்பிரிவுகளின் விதிமுறைகளின்படி **திருமதி. P.கனிமொழி, B.L.,** மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிபதி தரங்கம்பாடி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

தேதி : 22.02.2024

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : | சாவித்திரி | | |
| Husband Name | : | ரவிச்சந்திரன் | Court | : |
| Village | : | திருவிடைமருதுார். | Taluk | : |
| Calling | : | | Religion | : |
| Age | : | 59 | | |

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

முதல் விசாரணை:

நான் இவ்வழக்கில் வாதி மற்றும் வாதி தரப்பு 1வது சாட்சி ஆவேன். வழக்கு விபரங்கள் குறித்து முதன்மை சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

06.06.1959 தேதியிட்ட சொக்கலிங்கம் பிள்ளை என்பவர் கிரயம் பெற்ற கிரயப்பத்திரத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 24.12.2019 தேதியிட்ட வாதி, பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 11.01.2020 தேதியிட்ட 5ம் பிரதிவாதியால் அனுப்பப்பட்ட பதில் அறிவிப்பின் அசல் **வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

மேலும் ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.